# *செய்தி அறிக்கை*

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, இலங்கை இதழியல் கல்லூரி ஆகிய மூன்று நிறுவனங்களதும் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதி இலங்கை பத்தரிகை ஸ்தாபனத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது.

வருடாந்த அறிக்கையும் மூன்று நிறுவனங்களுக்குமான கணக்குகளும் கூட்டாக பத்திரிகை வெளியீட்டாளர் அமைப்பு, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் என்பவற்றால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றது..

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் தலைவர் சாம் விஜேசிங்க குறிப்பிடுகையில் பத்திரிகைகள் பதிலளிப்பாதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதன் மூலம் சமூகப் பொறுப்புள்ள ஊடக மொன்றைக் கட்டியெழுப்புவது தொடர்பாக அதிக கரிசணை காட்டியிருப்பது தெளிவாகின்றது” என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர்சபைத் தலைவர் திரு. குமார் நடேசன் அவரது ஆசிச் செய்தியில் “இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் வேண்டுதலை நிறைவேற்றுவதன் மூலம் பத்திரிகை வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் மத்தியில் இந்த ஆணைக்குழு நல்ல அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

“பத்திரிகைகள் வெளியிடுகின்ற விடயங்கள் தொடர்பாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற மத்தியஸ்த தீர்ப்புக்களை பத்திரிகைகள் பிரசுரம் செய்கின்ற நிலைமைகள் இப்போது உயர்வடைந்துள்ள. இதற்கு மேலதிகமாக பத்திரிகைகளுக்கு நேரடியாகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகளுக்கு பத்தரிகைகளின் ஆசிரியர்கள் தாமாகவே திருத்தங்களை அல்லது பதிலளிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது அல்லது விளக்கங்களைப் பிரசுரிக்கும் நிலைமைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் ஊடகவியலாளர்களும் இந்த ஒழுக்கக்கோவைக்கு ஒத்துழைத்து வருகின்றனர்.

அத்துடன் இலங்கை பத்தரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக்குழுவின் உறுப்பினர்கள் முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதில் வழங்கி வருகின்ற ஒத்துழைப்பிற்கும், பத்திரிகை வெளியீட்டாளர்கள், பத்திரிகைகளின் ஆசிரியர்கள், மற்றும் இந்த ஆணைக்குழுவின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்து வரும் பொதுமக்கள் ஆகியோருக்கும் அவர் நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் பற்றி அவர் குறிப்பிடுகையில் “ அது 1998 ஆம் ஆண்டு கொழும்பு பிரகடணத்துடன் ஆரம்பமாகியது. அதன் வருகையுடன் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் கண்காணிக்கத்தக்க அச்சு ஊடகத்துறைக்கான சுய கட்டுப்பாட்டு ஒழுக்க பொறிமுறை அறிமுகப்படுத்தப் பட்டதோடு இலங்கை இதழியல் கல்லூரி, எதிர்காலத்தில் சிறந்த பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கிலான தொழில்த்துறையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குகின்றது.”

“இன்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது இந்நாட்டில் முன்னணி ஊடக நிறுவனமாக திகழ்வதோடு அது இந்நாட்டில் ஊடகத்துறைக்கு சிறந்த எதிர்காலம் ஒன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் ஆகியோரை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது.”

இலங்கை இதழியல் கல்லூரியானது அச்சு, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய துறைகளில் முழு நேர டிப்ளோமாப் பயிற்சி நெறியை நடத்துவதன் ஊடாக வருடாந்தம் 75 மாணவர்களுக்கு இத்துறையில் பயிற்சியளித்து வருகின்றது. அத்துடன் இதழியல் கல்லூரி தொழிலில் புரிகின்ற ஊடகவிய லாளர்களுக்கும் மாகாண மட்டத்திலான ஊடகவியலாளர்களுக்கும் இடைக்கால பயிற்சி நெறிகளையும் செயலமர்வுகளையும் நடத்தி பயிற்சியளித்து வருகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இம் மூன்று நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் தற்போதைய அடைவுகளுக்கும் முழு அளவில் ஒத்துழைத்து வருகின்ற ஊழியர்களுக்கும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் உதவி வழங்குனர்கள் ஆகியோருக்கும் அவர் நன்றி தெரிவிக்கின்றார்.

இம் மூன்று நிறுவனங்களதும் கணக்காய்வு நிறுவனமாக ‘ஏர்ன்ஸ் அன்ட் யங்’ பட்டயக் கணக்காளர் நிறுவனமும் செயலக பணிகளை வழங்குவதற்கான நிறுவனமாக ‘ஒடிடர்ஸ் அன்ட் சேவிஸ்’ நிறுவனமும் மீண்டும் தேர்ந்தெடுக்க ப்பட்டுள்ளன.

பின்வருவோர் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர்களாவர். குமார் நடேசன், ரஞ்சித் விஜேவர்தன, சின்ஹ ரட்னதுங்க, மனிக் டி சில்வா, மொஹன்லால் பியதாச, வருன கருனாதிலக, திருமதி. சாமினி பொயலே, சீதா ரஞ்சனி மற்றும் பொத்தல ஜயந்த ஆகியோர்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர்களாக குமார் நடேசன், நிமல் வெல்கம, மனிக் டி சில்வா, சின்ஹ ரட்னதுங்க, சுனில் ஜயசேகர, அல்ஹாஜ் என். எம். அமீன், சுந்தர நிஹதாமானி டி மெல் மற்றும் நிஸ்தார் காசிம் ஆகியோர்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர்களாக ரஞ்சித் விஜேவர்தன, மனிக் டி சில்வா, சின்ஹ ரட்னதுங்க, பிரபாத் சஹபந்து, வருன கருனாதிலக மற்றும் காஞ்சன மாரசிங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முரண்பாட்டுத் தீர்வுக் குழுவின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற பாராளுமன்ற செயலாளர் நாயகம் சாம் விஜேசிங்க (தலைவர்), கலாநிதி தேவனேசன் நேசய்யா, ஜாவிட் யூசுப், லுசில் விஜேவர்தன, சிரி ரனசிங்க. திருமதி, சித்தி திருச்செல்வம், டியோன் சூமன், ஜயதிலக டி சில்வா, பிரமோட் டி. சில்வா, திருமதி விஜித பெர்னான்டோ தயா லங்காபுர ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.